**அனுப்புநர்**

திரு.கு.தேவராஜன், எம்.ஏ., எம்.எட்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்

ந.க.எண். 050792 /பி1/2014 நாள் : 16.12.2014

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – செப்டம்பர்/ அக்டோபர் 2014 - இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் துணைத் தேர்வு – தனித் தேர்வர்கள் – மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகம் – மறுகூட்டல் மற்றும் மார்ச்/ஏப்ரல் 2015 பொதுத் தேர்வுக்கு தனித்தேர்வர்கள் விண்ணப்பித்தல் - செய்திக்குறிப்பு வெளியிடக் கோரல் – தொடர்பு.

**பார்வை:** செய்திக்குறிப்பு.

-----

செப்டம்பர்/ அக்டோபர் 2014–ல் நடைபெற்ற இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் துணைத் தேர்வெழுதிய தனித் தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகம், மறுகூட்டல் மற்றும் மார்ச்/ஏப்ரல் 2015 பொதுத் தேர்வுக்கு தனித்தேர்வர்கள் விண்ணப்பித்தல் குறித்த "செய்திக் குறிப்பு" இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை தேர்வர்கள் மற்றம் பொதுமக்கள் அறியும் வகையில் தங்களது நாளேட்டில் , வானொலியில்/தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடுமாறும் ஒலி /ஒளி பரப்பிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

''இது விளம்பரம் அல்ல" எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:**
செய்திக்குறிப்பு

நகல்:

1. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்
2. அனைத்து முதன்மை/மாவட்டக் கல்விஅலுவலர்கள்.
3. அனைத்து மெட்ரிக்/ஆங்கிலோ இந்திய பள்ளி ஆய்வாளர்கள்.
4. பி5 மற்றும் பி6 பிரிவுகள், அலுவலகம்

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>

## <u>மார்ச்/ஏப்ரல் 2015 எஸ்.எஸ்.எஸ்.சி. பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க தவறிய மற்றும் ESLC தேர்ச்சியுற்ற தனித்தேர்வர்கள் விண்ணப்பித்தல் குறித்த</u>

# <u>செய்திக் குறிப்பு</u>

### <u>மார்ச்/ஏப்ரல் 201 5 எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வுக்கு தனித் தேர்வர்கள் விண்ணப்பித்தல்:</u>

மார்ச்/ஏப்ரல் 2015 –ல் நடைபெற உள்ள எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வுக்கு ஏற்கனவே விண்ணப்பிக்க தவறிய தகுதியான தனித்தேர்வர்கள் மற்றும் ESLC தேர்ச்சியுற்ற தனித்தேர்வர்கள் **22.12.2014** (திங்கட்கிழமை) முதல் **24.12.2014** (புதன்கிழமை) வரை மாலை **5.00** மணிக்குள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத்துறை சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று விண்ணப்பங்களை on- line- ல் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே **2014** ஜுன் **11** முதல் **30** தேதி முடிய வழங்கப்பட்ட தேதியில் அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புகளில் பெயர் பதிவு செய்து கொள்ள விடுபட்ட தனித்தேர்வர்கள் **01.12.2014** மற்றும் **08.12.2014** முதல் **12.12.2014** வரை தங்கள் பெயர்களை செய்முறை பயிற்சி வகுப்பில் பதிவு செய்து பயிற்சி பெற கடைசி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு, செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்த தனித் தேர்வர்கள் அப்பள்ளியின் தலைமை ஆசிரியரிடமிருந்து அறிவியல் பாட பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்துள்ளார் என்ற சான்றிதழினை பெற்று அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களில் (Service Centres) சமர்ப்பித்த பின்னரே மார்ச்/ஏப்ரல் **2015** பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்படுகிறது.

### <u>விண்ணப்பிக்க தகுதியானவர்கள்:</u>

1. 01.04.2015 அன்று 14 $\frac{1}{2}$ வயது பூர்த்தி செய்து மத்திய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 8 ம் வகுப்பு தேர்வில் ஆங்கிலத்துடன் தேர்ச்சி பெற்றுள்ள மாணவ/மாணவியரும் மற்றும் 9 ஆம் வகுப்பு பயின்று இடையில் நின்ற மாணவ /மாணவியரும், தேர்வு துறையால் நடத்தப்படும் 8 ம் வகுப்பு (ESLC) பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர்களும் இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.
2. அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கல்வி காப்புறுதி திட்டத்தின் கீழ் பயின்று 8- ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதாக மாற்று சான்றிதழ் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
3. உண்டு உறைவிடப் பள்ளியில் 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதாக மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.
4. திறந்த வெளிப் பள்ளியில் "C" level சான்றிதழ் பெற்றவர்கள்
5. பள்ளிசாரா கல்வித் திட்டத்தின் கீழ் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதாக மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.
6. 14 $\frac{1}{2}$ வயது பூர்த்தி செய்த உழைக்கும் சிறார் கல்வி திட்டத்தின் கீழ் தொழிலாளர் அமைச்சகம் இந்திய அரசின் கீழ் வழங்கப்பட்ட பள்ளிசாரா கல்வி மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.
7. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கத்தால் நடத்தப்பட்ட திறந்தவெளிப் பள்ளியில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களில் 01.04.2015 அன்று 14 $\frac{1}{2}$ வயது பூர்த்தியடைந்திருக்கும் திறந்தவெளி பாடத்ததிட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மட்டும், தனித்தேர்வர்களாக மார்ச் 2015 ல் நடைபெறும் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

**ஏற்கெனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள்:**

1. எஸ்.எஸ்.எல்.சி பழைய பாடத்திட்டத்தில் தோல்வியுற்றிருப்பின், தோல்வியுற்ற பாடங்களை மட்டும் தற்போதுள்ள பாடத்திட்டத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். பழைய பாடத்திட்டத்தில் அறிவியல் பாடத்தில் அறிவியல் பாட செய்முறை பயிற்சி பெற்று செய்முறைத் தேர்வெழுதிய பின்பே அறிவியல் பாடத்தேர்வினை மார்ச் 2015 தேர்வினை எழுத வேண்டும்.
2. ஒ.எஸ்.எல்.சி பழைய பாடத்திட்டத்தில் அறிவியல் பாடத்தை தவிர ஏனைய பாடங்களில் தோல்வியுற்றிருப்பின், தோல்வியுற்ற பாடங்களை மட்டும் தற்போதுள்ள பாடத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். அறிவியல் பாடத்திற்கு வ.எண் 1–ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை கடைபிடிக்க வேண்டும்.
3. மெட்ரிக்/ஆங்கிலோ இந்திய பழைய பாடத்திட்டத்தில் ஓரிரு பாடங்களில்கூட தோல்வியுற்றிருப்பினும் மேற்படி தேர்வர்கள் எஸ்.எஸ்.எல்.சி புதிய பாடத்தில் அனைத்துப் பாடங்களையும் எழுத வேண்டும். தேர்வரின் கைவசம் உள்ள மெட்ரிக்/ ஆங்கிலோ இந்திய அசல் மதிப்பெண் சான்றிதழை சேவை மையத்தில் சமர்ப்பித்துவிட்டு தற்போதுள்ள பாடத்திட்டத்தில் தேர்வெழுத வேண்டும். அறிவியல் பாடத்தினைப் பொறுத்தவரை அறிவியல் பாட செய்முறைப் பயிற்சிக்குப் பதிவு செய்து உரிய பயிற்சி பெற்று செய்முறைத் தேர்வெழுதிய பின்பே மார்ச் 2015 தேர்வெழுத வேண்டும்

**வெளிமாநில மற்றும் வெளிநாடு வாழ் தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முறை:**

இவ்வலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சேவை மையங்களில் (Service Centres) நேரடியாக சென்று விண்ணப்பிக்க இயலாத வெளி மாநில மற்றும் வெளிநாடு வாழ் தனித்தேர்வர்கள், மார்ச்/ஏப்ரல் 2015 எஸ்.எஸ்.எஸ்.சி. பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், இத்துறையின் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மற்றும் புகைப்படத்துடன் தேர்வரின் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் மூலம் சென்னை – 6 , அரசுத் தேர்வுக்கள் இயக்கக இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களை மேற்குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் நேரில் அணுகி விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

**வெளிமாநில / வெளிநாட்டில் பயின்றவர்கள் விண்ணப்பிக்கும் முறை:**

வெளிமாநிலம் மற்றும் வெளி நாட்டில் பயின்று தமிழ் நாட்டில் மார்ச்/ஏப்ரல் 2015 எஸ்.எஸ்.எஸ்.சி. பொதுத் தேர்வு எழுத விரும்பும் தனித்தேர்வர்கள் இடம்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate) மற்றும் இணை சான்றிதழ் (Evaluation Certificate) பெற்று சமர்ப்பித்த பின் சேவை மையங்களில் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத்துறை சேவை மையங்கள் ((Government Examinations Service Centres):**

ஆண் தனித்தேர்வர்களும் பெண் தனிததேர்வர்களும் தங்களது விண்ணப்பங்களை ஆன் லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக ஆண், பெண் தனித்தேர்வர்களுக்கு தனித்தனியே சேவை மையங்கள் (Service Centres) அமைக்கப்பட்டுள்ளன. தனித்தேர்வர்கள் இம்மையங்களுக்கு நேரில் சென்று தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத்துறை சேவை மையங்களின் விவரங்களை www.tndge.in என்ற இணையதளத்தில் அறிந்துக் கொள்ளலாம். மேலும், அனைத்து

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் , அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் மண்டலத்துணை இயக்குநர் அலுவலர் அலுவலகங்களிலும் அறிந்துக் கொள்ளலாம்.

**<u>விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள்:</u>**

கல்வி மாவட்டவாரியாக அமைக்கப்படுள்ள அரசுத் தேர்வுத்துறைகள் சேவை மையங்களில் (Service Centres) 22.12.2014 (திங்கட்கிழமை) முதல் 24.12.2014 (புதன்கிழமை) வரை மாலை 5.00 மணிக்குள் தங்களின் விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**<u>தேர்வுக் கட்டணம்:</u>**

தேர்வுக் கட்டணம் ரூ.125/- டன் கூடுதலாக ஆன்லைன் பதிவு கட்டணம் ரூ.50/-, மொத்தம் ரூ.175/–

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன் லைன் பதிவுக் கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும். **பார்வையற்றோருக்கு மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

**<u>விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம் :</u>**

ஆன் லைனில் விண்ணபத்தினைப் பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச்சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத்துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுகளை (Admission Certificate) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால் ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்து கொள்ள வேண்டும்.

1. **<u>நேரடித் தனித்தேர்வர்கள் (Direct Private Candidate)</u>**

i. **எட்டாம் வகுப்பு, ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு படித்தமைக்கான மாற்றுச் சான்றிதழ் நகல்**

ii. **எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு அசல் மதிப்பெண் சான்றிதழ்**

iii. **இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள கல்வித்தகுதிக்கான சான்றிதழ் நகல்**

iv. **அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்துக் கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது தற்போது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.**

1. **<u>மெட்ரிக்/ஆங்கிலோ இந்திய பாடத்திட்டத்தில் பயின்று தோல்வியுற்ற தேர்வர்கள்</u>**

i **மெட்ரிக்/ஆங்கிலோ இந்திய அசல் மதிப்பெண் சான்றிதழ்**

ii **அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்துக் கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது தற்போது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.**

2. **<u>வெளிநாட்டில் அல்லது வெளிமாநிலங்களில் / CBSE–ல் பயின்ற தேர்வர்கள்</u>**

i **உரிய கல்வி அலுவலரின் மேலொப்பத்துடன் கூடிய (**endorsed certificate**) மாற்றுச் சான்றிதழ் அல்லது மதிப்பெண் சான்றிதழ் அசல்.**

ii **அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்துக் கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது தற்போது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.**

3. **<u>ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள்</u>**

i **தேர்ச்சிபெற்ற பாடங்களின் மதிப்பெண் சான்றிதழ் நகல்**

ii **அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்துக் கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது தற்போது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.**

**<u>மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கான அறிவுரை</u>**

**மார்ச் 2015, சலுகைகள் குறித்த அரசாணை நகல்களை கீழ்காண் அரசுத் தேர்வுத் துறையின் இணைய தளத்தில் காணலாம்.**

**செய்முறைத் தேர்வினை செய்ய விரும்பாத மாற்றுத் திறனாளித் தேர்வர்கள்** Online–**ல் விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட மேற்படி விண்ணப்பத்துடன் விலக்களிக்கக் கோரும் கடிதம் உரிய மருத்துவச் சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்களுடன் இணைத்து சேவை மையத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.**

<u>தேர்வு மையம்:</u>

தனித்தேர்வர்கள் அவர்கள் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில் தேர்வெழுத வேண்டும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும், இத்தேர்வுகள் சார்ந்த விரிவான தகவல்களை www.tndge.in **என்ற இணையதளத்தில் காணலாம்.**

**ஒம்/–**

**இயக்குநர்**

இடம்: சென்னை – 6

நாள்: 16.12.2014

**அனுப்புநர்**
திரு. ப. இராமராஜ்., எம்.எஸ்.சி., எம்.எட்.,
இணை இயக்குநர் (பணியாளர்) ,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

ந.க.எண். **050792 /பி1/2014** நாள் : **16.12.2014**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 - மார்ச்/ஏப்ரல் 2015 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு – தனித் தேர்வர்கள் – சேவைமையங்கள் மூலம் பதிவு செய்தல் – பதிவு செய்த விண்ணப்பங்கள் மற்றும் கருவூல சலானை மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களில் ஒப்படைத்தல் – சார்ந்து.

**பார்வை:** இவ்வலுவலக அறிவிக்கை நாள் 16.12.2014 .

-----

பார்வையில் காணும் இவ்வலுவலக அறிவிக்கையில் மார்ச்/ஏப்ரல் **2015** எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தவறிய தகுதியான தனித்தேர்வர்கள் மற்றும் ESLC தேர்வில் தேர்ச்சியுற்று **08.12.2014** முதல் **12.12.2014** வரை செய்முறை பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்துள்ள தனித்தேர்வர்களும் **22.12.2014** முதல் **24.12.2014** வரை அரசுத் தேர்வுகள் துறை சேவை மையங்கள் மூலம் தேர்வுக் கட்டணத் தொகையை பணமாக செலுத்தி ஆன்லைனில் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வுகள் சேவை மையங்களாக செயல்படும் அனைத்து பள்ளிகளுக்கும் எற்கெனவே வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password ஐ பயன்படுத்தி மேற்காண் தேதிகளில் விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவு செய்ய உரிய அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் சேவை மையங்களில் வசூலிக்கப்பட்ட தேர்வு கட்டணத் தொகையை செலுத்துச் சீட்டு மூலம் **26.12.2014** அன்று அரசு கருவூலத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள தலைப்புக் கணக்கில் செலுத்த தங்களது வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களையும் (Service Centres) அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கணக்குத் தலைப்பு

**0202** Education Sports Arts and Culture,

**01** General Education

**102** Secondary Education

AA Examinations Conducted by the Director of Government Examinations

01 Examinations

(D.P.Code 0202 01 102 AA 0101)

கருவூலத்தில் செலுத்தியதற்கான செலுத்து சீட்டு மற்றும் தனித் தேர்வர்களின் விண்ணப்பப் படிவங்களை உரிய இணைப்புகளுடன் **29.12.2014** அன்று சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கவும் அனைத்து அரசுத் தேர்வுகள் துறை சேவை மையங்களை (Service Centres) அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**

**இணை இயக்குநர் (பணியாளர்)**

**<u>நகல்:</u>**

1. அனைத்து மாவட்டக் கல்விஅலுவலர்கள் – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்

   - தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்
3. “A5” பிரிவு அலுவலகம்.